**மடுல்ல பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மடுல்ல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 20,785 தொகையான மிகைக் கட்டணச் செலவினம் மூலதனச் செலவினமான கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 171,396,859 தொகையான காணி மற்றும் கட்டிடங்களின் மீதியினை உரிதிப்படுத்திக் கொள்வதற்கான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணம் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிற்காக தற்காலிகமான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் 134(1) ஆம் பிரிவு | அபிவிருத்தி செயய்ப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதன வரி அறவிடப்படடிருககவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி செயய்ப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக உள்ளூரராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,027,670 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,312,403 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 150,000 | - | 211,800 | - | - | - | - | - |
| (ii) | வாடகை | 25,804,400 | 7,637,839 | 7,632,416 | 10,050 | 7,479,115 | 29,542,489 | 5,947,208 | 28,340 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 926,330 | - | 649,811 | - | 666,700 | - | 898,627 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 53,119,860 | 243,524 | 43,104,303 | 117,821 | 50,172,761 | 382,190 | 39,912,831 | 162,517 |
| | மொத்தம் | 80,000,590 | 7,881,363 | 51,598,330 | 127,871 | 58,318,576 | 29,924,679 | 46,758,666 | 190,857 |

### 2.2.2 நீர் கட்டண வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய ரூபா 117,507 தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 93,823 தொகையான நிலுவை நீர் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.3 கடை வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய ரூபா 16,050 தொகை மற்றும் 9 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 40,800 தொகையான நிலுவை கடை வாடகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.4 இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கியதால் அறவிட வேண்டிய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பேகோ லோடர் இயந்திரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வாடகைக்கு வழங்கியதற்காக | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை அறவிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்குரிய அறவிட வேண்டிய ரூபா |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 130,360 தொகையான நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | 42,380 தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 236,429 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 3,213,513 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 887,000 தொகையான 04 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | ரூபா 25,000 தொகையான இரண்டு செயற்பாடுகளை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 862,000 தொகையான 02 செயற்பாடுகள் நிதி போதியளவில் இல்லாமையின் காரணமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 32,064,810 தொகையான 04 வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. | பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | எதிர்பார்த்த மூலதன வருமானம் கிடைக்கப்பெறாமையின் காரணமாக உரிய வேலைகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030” தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நோக்கம் மற்றும் இலக்கை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தனியார் காணிகளில் அகற்றப்பட்டிருந்ததுடன் உக்கும் கழிவுகளை பயன்படுத்தி சேதனப் பசளை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 பதவிகளுக்குரிய ஊழியர் மிகை 03 ஆகவும், 04 பதவிகளுக்குரிய ஊழியர் வெற்றிடம் 05 ஆகவும் காணப்பட்டன. | மிகையான பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளவேண்டியிருந்ததுடன் வெற்றிடங்களை நிரப்பவும் வேண்டும். | பதவியணியினரை சமப்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் குறிப்பாக இனங்கண்டு மெய்மெய்யாய்வு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக சபைக்குரிய காணி கட்டிடங்கள் தொடர்பாக மெய்மெய்யாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான பல்வேறு அளவுகளில் உடைய 28 காணிகளின் அளத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 61 காணிகளின் சட்ட ரீதியான உரித்து கையேற்கப்படவில்லை. | சபைக்குரிய சகல காணிகளைும் அளவீடு செய்து சட்ட ரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | சகல காணிகளையும் அளவீடு செய்து சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | சபைக்குரிய 04 நூலகங்களினால் 1994 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை வாசகர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 157,749 கிரயமான 753 நூலகப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அதற்குப் பதிலாக பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாசகர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அதற்காக பணத்தை பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் பிணையாளிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது வரையில் அந்த புத்தகங்களில் ஒரு பகுதி கிடைக்கப் பெற்றுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 452 வீதிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் வீதிப் பதிவேடு தயாரித்து வர்த்தமானி மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வீதிகள் மற்றும் சிறு வீதிகளுக்குரிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 02 இயந்திரங்கள் மற்றும் ஒரு வாகனம் என்பன 2019 சனவரி 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் ரூபா 244,311 எரிபொருள் செலவினமொன்றைச் செய்து 496.3 மீட்டர் மணித்தியாலங்கள் ஓடப்பட்டு 69 வேலைகள் நிறைவேற்றப்பட்டதாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த வேலைகளுக்குரிய மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்பட வேண்டும | எதிர்காலத்தில் சரியான பிரகாரம் மதிப்பீட்டை தயாரித்து பூர்த்தி வேலை அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட | எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப்பெறாமை நிறைவேற்றுக்குரிய சந்தர்ப்பம் கிடைக்காமை, செயற்திட்டம் |

| | | |
|---|---|---|
| 439,000 தொகையான 5 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை | வேண்டும். | இரத்துச் செய்யப்பட்டமை போன்றவை காரணங்களாக இருந்ததை அறியத்தருகின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பேரிதயளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | இரண்டாம் காலாண்டு முதல் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான முதலாவது குழுக்கூட்டம் 2020 யூன் மாதத்தின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்படுள்ளதை அறியத்தருகின்றோம். |